மக்கள் அறிவியல் சாசனம் 2026

தமிழக வளர்ச்சிக்கான ஒரு தொலைநோக்குப் பார்வை
17வது சட்டப் பேரவைத் தேர்தல் – தமிழ்நாடு

வேட்பாளர்கள் மற்றும் அரசியல்
கட்சிகளுக்கான வேண்டுகோள்கள்

தமிழ்நாடு அறிவியல் இயக்கம்

அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், சென்னை 600086
044 28113630, tnsf.co.in, tnsfcontact@gmail.com

தமிழகத்தின் சமூக, பொருளாதார மற்றும் அறிவுசார் வளர்ச்சியில் அறிவியல் இயக்கங்கள் ஆற்றிவரும் பணி மகத்தானது. "அறிவியல் மக்களுக்கே... அறிவியல் சமூக மாற்றத்திற்கே" என்ற முழக்கத்தோடு, கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக விளிம்பு நிலை மக்கள் முதல் விஞ்ஞானிகள் வரை அறிவியல் பார்வையை விதைத்து வரும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம், வரவிருக்கும் 2026 தமிழக சட்டமன்றத் தேர்தலை ஒரு மிகமுக்கியமான அரசியல் மற்றும் சமூகத் தருணமாகக் கருதுகிறது.

ஒரு மாநிலத்தின் உண்மையான வளர்ச்சி என்பது வெறும் பொருளாதாரக் குறியீடுகளில் மட்டும் அடங்கியது அல்ல; அது அந்த மாநிலத்தின் கல்வித் தரம், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அறம், அனைவருக்கும் சமமான சுகாதாரம், பாலினப் பாகுபாடற்ற சமூக அமைப்பு மற்றும் எதையும் கேள்வி கேட்டு அறியும் அறிவியல் மனப்பான்மை ஆகியவற்றில்தான் அடங்கியுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 51A(h)-ன் படி, "அறிவியல் மனப்பான்மை, மனிதநேயம், தேடல் மற்றும் சீர்திருத்த உணர்வை வளர்ப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமை" என்பதை நாம் நினைவுகூர வேண்டும். அந்த வகையில், தமிழகத்தை ஆளப்போகும் புதிய அரசைத் தேர்ந்தெடுக்கவுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், தமிழகத்தின் எதிர்காலத்தைச் செதுக்கும் கீழ்க்கண்ட ஐம்பெரும் துறைகளில் தெளிவான நிலைப்பாட்டையும், தொலைநோக்குத் திட்டங்களையும் கொண்டிருக்க வேண்டும் என அறிவியல் இயக்கம் வலியுறுத்துகிறது:

1. *கல்வி: வணிகமயமாக்கப்படாத, சமமான மற்றும் தரமான பொதுக்கல்வி உரிமை.*

2. *சுற்றுச்சூழல்: காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் பசுமைத் தமிழகம் மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு.*

3. *சுகாதாரம்: கடைக்கோடி மனிதருக்கும் தரமான மருத்துவம் கிடைக்கும் பொது சுகாதாரக் கட்டமைப்பு.*

4. *பாலின சமத்துவம்: வன்முறையற்ற, அதிகாரப் பகிர்வு கொண்ட சமத்துவச் சமூகம்.*

5. *அறிவியல் மனப்பான்மை: மூடநம்பிக்கைகளைத் தகர்த்து, மக்களிடையே தர்க்கரீதியான சிந்தனையை ஊக்குவிக்கும் முன்னெடுப்புகள்.*

இந்தக் கோரிக்கைகள் வெறும் கோரிக்கைகள் மட்டுமல்ல, தமிழகத்தின் அடுத்த தலைமுறைக்கான பாதுகாப்பான மற்றும் முன்னேற்றகரமான வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் உரிமைக் குரல்கள். இவற்றை உங்கள் தேர்தல் அறிக்கைகளில் இணைப்பதன் மூலமும், சட்டமன்றத்தில் இதற்காகக் குரல் கொடுப்பதன் மூலமும் ஒரு அறிவுசார் தமிழகத்தைப் படைத்திடும் பணிக்கு உங்கள் பங்கினை ஆற்றிடும் வாய்ப்பாக பயன்படுத்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மாநில மையம்
தமிழ்நாடு அறிவியல் இயக்கம்

அறிவியல் மற்றும் கல்வி சார்ந்த கோரிக்கைகள்

1. அறிவியல் சுதந்திரம் மற்றும் வெளிப்பாட்டைப் பாதுகாக்கும் அதே வேளையில், பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் மூடநம்பிக்கைகள், மோசடி நடைமுறைகள் மற்றும் போலி அறிவியலுக்கு எதிராக தெளிவான சட்டபூர்வமான அபராதங்களுடன் வலுவான சட்டத்தை இயற்றுதல்.

2. மாநிலத்தில் கல்விக்கு நிதி ஒதுக்கீடு உள்கட்டமைப்புக்கும், கற்றல் கற்பித்தல் பணிகளுக்கும், வளர்ந்து வரும் உலகளாவிய சூழல், தொழில்நுட்பத்திற்கும் ஏற்ற வகையில் அதிகப்படுத்திட வேண்டும்.

3. ஒன்றிய அரசானது, மாநில அரசுக்கு ஒதுக்கும் நிதி, நிதிப்பங்கீடாக இருக்கவேண்டுமே தவிர, திட்டங்கள் அடிப்படையில் இருக்கக்கூடாது என வலியுறுத்தவேண்டும். அந்த நிதியை கல்விக்காக மட்டுமே மாநில அரசு சுதந்திரமாக செயலாக்கம் செய்திட உறுதியுடன் செயலாற்ற முன்வர வேண்டும்.

4. ஆய்வகங்கள், ஆராய்ச்சி உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்களை நவீனப்படுத்த அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கான நிதியை அதிகரித்தல், வழக்கமான மேம்படுத்தல்கள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களுக்கான அணுகலை உறுதி செய்தல்.



5. சமூகத்தில் அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்துவதற்காக பொது அறிவியல் தொடர்பு மற்றும் பகுத்தறிவு முயற்சிகளுக்கு ஆண்டுதோறும் குறைந்தபட்சம் ₹50 கோடி நிதி ஒதுக்குதல். அறிவியல் மனப்பான்மைக்கான ஆணையம் அமைத்தல்

6. மாநிலத்தில் "Scientific Literacy Mission" என்ற அமைப்பை உருவாக்கி, அனைத்து அறிவியல் விழிப்புணர்வு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.

7. அனைத்து அரசு துறைகளிலும் Evidence-Based Policy Making கட்டாயமாக்கி, முக்கிய திட்டங்களுக்கு "Scientific Impact Assessment" நடைமுறைப்படுத்துதல்.

8. அறிவியல் விழிப்புணர்வை அளவிட "State Science Literacy Index" உருவாக்கி, மாவட்ட வாரியாக ஆண்டுதோறும் வெளியிடுதல்.

9. நீடித்த வளர்ச்சிக்கான தெளிவான பார்வையுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான (R&D) பொதுச் செலவினத்தை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) குறைந்தது 1% ஆக அதிகரித்தல்.

10. அரசு மற்றும் தமிழ் ஊடகங்கள் மற்றும் கல்வி தளங்களில் அறிவியல் சார்ந்த உள்ளடக்கங்களுக்கு

குறைந்தபட்ச ஒளிபரப்பு ஒதுக்கீட்டை (minimum airtime mandate) சட்டரீதியாக நிர்ணயித்தல்.

11. போலி விளம்பரங்கள், ஜோதிடம் சார்ந்த ஏமாற்றங்கள் மற்றும் அறிவியல் ஆதாரம் இல்லாத சிகிச்சை விளம்பரங்களுக்கு முன்-அனுமதி (pre-clearance) மற்றும் fact-checking முறை அறிமுகப்படுத்துதல்.

12. உயர்கல்வி ஆராய்ச்சி நிறுவனங்களில் திருமணம்/ மகப்பேறு காலங்களில் பெண் ஆராய்ச்சி மாணவர்களுக்கு சில தளர்வுகளும்/ சலுகைகளும் அளிக்கவேண்டும். ஆராய்ச்சிக்கான நிதியைஅதிக அளவில் ஒதுக்கீடு செய்து, அதில் மாணவிகளின் ஆராய்ச்சிக்கு என தனிநிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

13. இந்தியாவின் உயர்கல்வியை நிர்வகித்து வந்த UGC போன்ற உயர்கல்வி முகமைகளை இணைத்து VBSA என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது மதச்சார்பற்ற இந்தியக்கல்வி முறையை சீரழிக்கும் வகையில் உள்ளதால் அதனை நடைமுறைப்படுத்தக் கூடாது.





14. அரசு உதவி பெரும் கல்லூரிகள் தொடர்ந்து உயர் தரத்துடன், நல்ல உள் கட்டமைப்புடன் இயங்கிட அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.

15. நீட் தேர்வு ரத்து செய்தல் நீட் தேர்வு உளவியல் ரீதியாக குழந்தைகளை பாதிக்கிறது. சாதாரண ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளின் கனவைச் சிதைக்கிறது. சமூக நீதிக்கு எதிராக உள்ள மத்திய அரசின் நீட் தேர்வை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

16. NEET/ JEE/ CUET/CLAT போன்ற அனைத்து வகை நுழைவுத் தேர்வுகள் ரத்து செய்யப்பட வேண்டும். 12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடைபெற வேண்டும்.

17. தமிழ் நாட்டின் உயர்கல்வி வரலாற்றில் துணை வேந்தர், பதிவாளர், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் போன்ற பதவிகளில் பட்டியல் சமூகம் பழங்குடி மக்கள் இதர பிற்படுத்தப்பட்டோர் பெரும்பாலும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது. எனவே பல்கலைக்கழக ஒற்றை உயர் பதவிகளில் இட ஒதுக்கீட்டு முறையை சுழற்சி முறையில் பின்பற்ற வேண்டும். அப்போது தான் அனைத்து சமூக மக்களும் அந்த வாய்ப்பை பயன்படுத்திட முடியும்.


18. கல்வி உரிமைச்சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவந்து பணியில் உள்ள ஆசிரியர்கள், TET எழுதுவதில் இருந்து விலக்கு அளிக்க ஆவண செய்ய வேண்டும்.

19. கிராமப்புறங்களில் நூல் நிலையங்களின் கட்டமைப்புகளை உயர்த்திட வேண்டும். அதனை அரசு போட்டித்தேர்வுகளுக்கு தயார்செய்யும் மையங்களாக கட்டமைக்கவேண்டும்

20. மாணவர்கள் அறிவியல் சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் திறனை மேம்படுத்தும் வகையில், பள்ளிப் பாடத்திட்டத்தில் கட்டாய ஆராய்ச்சிப் பகுதியை அறிமுகப்படுத்துதல் மனப்பாடம் செய்து தேர்வு எழுதும் முறையை மாற்ற வலியுறுத்துதல். பள்ளி மாணவர்கள் தங்களது ஆராய்ச்சிகளை சமர்ப்பிக்க மாவட்ட மற்றும் மாநில அளவில் வழிகாட்டுதல், மானியங்கள் மற்றும் தளங்களை வழங்குதல், இதன் மூலம் கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி அடிப்படையிலான கற்றலை ஊக்குவித்தல்.

21. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் STEAM ஆய்வகங்களை நிறுவுதல் மற்றும் TNSPARK திட்டத்தை அனைத்து பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துதல்.





22. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊடாடும் கண்காட்சிகள் மற்றும் ஆய்வகங்களுடன் முழுமையாக வசதிகள் கொண்ட அறிவியல் மையங்களை நிறுவி, அவற்றை ஆராய்ச்சி மையங்களாக மாற்றுதல்.

23. மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிகளை மேலும் பலப்படுத்தவேண்டும். அரசு மாதிரிப் பள்ளிகளை போல அனைத்து பள்ளிகளுக்கும் வசதி வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

24. தனியார் சுயநிதி பள்ளிகள் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் ஊதியம் மிக மிக குறைவு. வருந்தத்தக்கது. குறைந்த பட்ச ஊதியம் தீர்மானம் செய்து அதனை அவர்களுக்கு சென்று சேர்கிற வடிவில் மாற்றி அமைக்க வேண்டும்.

25. நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் காலை உணவுதிட்டத்தை விரிவுபடுத்தவேண்டும்.

26. மாநிலக் கல்வி கொள்கையை நடைமுறைப் படுத்த வேண்டும். உயர்கல்வி நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். மாநில கல்விக்கொள்கை அடிப்படையில்,

மாநில கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கி அதன்படி புத்தகங்கள் எழுதிட வேண்டும்.

27. தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து வகைப் பள்ளிகளையும் மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரவேண்டும். அங்கு தமிழ்மொழியை கட்டாயப்பாடமாக்க வேண்டும்.

28. மாணவர்களின் அறிவியல் மனப்பான்மையை வளர்த்தெடுக்கும் நடமாடும் அறிவியல் ஆய்வகமான வானவில் மன்றத்தை நான்காம்வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை விரிவுபடுத்தவேண்டும்.

29. உயர்கல்வி பயில அரசுப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டினை, 15 சதவீதமாக உயர்த்தவேண்டும். அதில் அரசு உதவிபெறும் மாணவர்களுக்கு 5சதவீதத்தினை ஒதுக்கவேண்டும்.

30. பள்ளிகளில் நிலவும் சாதிய பாகுபாடுகள் சார்ந்து நீதியரசர் சந்துரு கமிட்டி சமர்பித்த அறிக்கையினை நடைமுறைப்படுத்தவேண்டும். மாணவர்களுக்கான, ஆசிரியர்களுக்கான மன நல வகுப்புகள், பயிற்சிகள்





தொடர்ந்து நடைபெற வேண்டிய வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

31. பழங்குடி மக்கள் பள்ளிகள் வனப்பள்ளிகள் பொதுப் பள்ளிகளோடு இணைக்கப்பட வேண்டும். விடுதிகள் அந்த துறையின் நிர்வாகத்தில் தொடரலாம்.

32. பழங்குடி மக்கள் குழந்தைகள் கல்வித்தரம் உயர ஐந்தாம் வகுப்பு வரை ஆசிரியர்கள் அந்தப் பகுதி பழங்குடி மக்கள் அல்லது அந்தப் பகுதி மக்கள் மொழி அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

சுகாதாரம், மருத்துவப் பணிகள் சார்ந்த பரிந்துரைகள்

தமிழ்நாட்டில் சுகாதார உரிமையும், சுகாதார சேவைகளுக்கான உரிமையையும் நடைமுறைபடுத்த அரசியல் கட்சிகள் உறுதி செய்ய வேண்டுகிறோம்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிடும் அனைத்துக் கட்சி வேட்பாளர்களுக்கும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் தமிழ்நாட்டில் சுகாதாரநிலையை மேம்படுத்த கீழ்க்கண்ட ஆலோசனைகளை முன்வைக்கிறோம். இக்கோரிக்கைகளை தங்களது வாக்குறுதியில் சேர்த்திடவும், தங்களது கட்சி சார்பில் முன்வைக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அரசியல் கட்சிகள் தங்களது வாக்குறுதியில் சேர்க்கவைக்க வேண்டிய கோரிக்கைகள்:

1. நலவாழ்வு சேவையை அடிப்படை உரிமையாக்க தமிழக அரசு சட்டம் இயற்ற வேண்டும்.

பணம் செலுத்த இயலாத காரணத்தால் யாருக்கும் சிகிச்சை மறுக்கப்படக்கூடாது. விரிவான நோய் தடுப்பு, ஆரோக்கிய மேம்பாடு மற்றும் சிகிச்சை சேவைகள் ஆகிய அனைத்தையும் அவர்கள் பதிவு செய்யப்பட்ட ஆரம்ப சுகாதார மையம் வழியாக பெற உரிமையை உறுதி செய்ய வேண்டும். ஒரு நோயாளி அருகிலுள்ள எந்த அரசுத் துறை அல்லது தனியார் துறை சுகாதார சேவையை அணுகினாலும், கட்டணமின்றி சிகிச்சை கிடைக்க அரசாங்கம் பொறுப்பு ஏற்க வேண்டும்.



2.நோய்சுமையை குறைக்கும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள்

காசநோய், டெங்கு, மலேரியா, எச்ஐவி/எய்ட்ஸ் மற்றும் பிற தொற்றுநோய்களுக்கு தீவிர தடுப்பு மற்றும் ஆரம்பத்தில் கண்டறியும் திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும். நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய நோய்கள், புற்றுநோய், சிறுநீரக நோய் மற்றும் சுவாச நோய்களை கண்டறிய ஆண்டுதோறும் இலவச சமூக அளவிலான பரிசோதனை கட்டாயமாக நடத்த வேண்டும். நோய் இருப்பதற்கான அறிகுறிகளுடன் இருப்பவர்களுக்கு முழுமையான இலவச சிகிச்சை உறுதி செய்யப்பட வேண்டும்.

3.முதியோர் & மாற்றுத் திறனாளிகளுக்கு முழுமையான பராமரிப்பு வசதி

அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ சேவை அமைக்க வேண்டும். படுக்கையிலேயே உள்ள முதியோருக்கு வீட்டு பராமரிப்பு சேவை ஏற்படுத்தப்பட வேண்டும். உதவி சாதனங்களுக்கு மானியம் வழங்கப்பட வேண்டும். அரசு மருத்துவமனைகளில் தனியாக முதியோர் & மாற்றுத்திறனாளிகளுக்கு வார்டுகள் ஏற்படுத்த வேண்டும். பரிசோதனை மற்றும் நிபுணர் சேவைகளில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் நேரடியாக முதியோர்களையும்,



மாற்றுத்திறனாளிகளையும் சந்தித்து பரிசோதனை மற்றும் மருந்து வழங்க வேண்டும்.

4. முதன்மை மற்றும் அவசர சிகிச்சை சேவைகளை வலுப்படுத்துதல்

அனைத்து PHC மற்றும் CHC மையங்களிலும் தேவையான மருத்துவப் பணியாளர்கள், பரிசோதனை வசதிகள், மருந்துகள், டிஜிட்டல் மருத்துவ பதிவுகள் மற்றும் இருவழி பரிந்துரை (referral system) உறுதிசெய்ய வேண்டும். ஆரம்ப மற்றும் துணை நிலை சுகாதார மையங்களில் மாலைநேர OPD சேவை வழங்கப்பட வேண்டும். 24 மணிநேர ஆம்புலன்ஸ் சேவையும், அவசர சேவை மற்றும் விபத்து சிகிச்சைகள் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் வலுப்படுத்தப்பட வேண்டும். வட்டார ஆரம்ப சுகாதார மையங்களிலும், தாலுகா மருத்துவமனைகளிலும் அவசர சிகிச்சைப் பிரிவு துவங்கி செயல்படுத்த வேண்டும். அருகில் இருந்தால் விபத்து மற்றும் அவசர சிகிச்சை உடனடியாக கிடைக்கும். மேலும் அனைத்து ஆரம்ப சுகாதார மையங்கள், வட்டார, தாலுகா மருத்துவ மனைகளில் ஆம்புலன்ஸ் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பெரும்பாலான அவசர சிகிச்சைகள் மேற்கண்ட ஆலோசனைப்படி நடைபெற்றால் மாவட்ட மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் நெருக்கடியை குறைக்க முடியும்.

5. பொறுப்புணர்வு மற்றும் ஒழுங்குமுறை & மருத்துவக் காப்பீடு

வெளிப்படையான புகார் தீர்வு, சமூக பங்கேற்பை வலுப்படுத்துதல், நோயாளிகள் உரிமைகள் பட்டியலை


அனைத்து மருத்துவமனைகளிலும் காட்சிப்படுத்துதல் செய்ய வேண்டும். தனியார் மருத்துவமனைகளின் கட்டணங்களை கட்டுப்படுத்த வேண்டும். சுகாதாரத்துறைக்கு போதுமான வருடாந்திர பட்ஜெட் தேசிய பொதுச் சுகாதார அளவுகோல்களுக்கு ஏற்ப ஒதுக்கீடுசெய்ய வேண்டும். மருத்துவக் காப்பீடு திட்டத்தை முறைப்படுத்துதல் வேண்டும். தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் கூட மருத்துவக் காப்பீடு அட்டை பயன்படுத்தி சிகிச்சையளிக்கப்படுகிறது. தனியார் மருத்துவமனைகளில் காப்பீடு தொகையைத் தாண்டியும் கூடுதலாக தொகை வசூலிக்கப்படுகிறது. எனவே ஒவ்வொரு நோய்க்கும் குறிப்பிட்ட தொகை நிர்ணயம் செய்ய வேண்டும். காப்பீடு தொகைபோக கூடுதலாக வசூல் செய்யும் மருத்துவமனைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. நிரந்தர மருத்துவப் பணியாளர்களை உறுதி செய்தல்

தாலுகா, வட்டார மற்றும் அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களின் சேவைகளையும் விரிவாக்கம் செய்ய வேண்டும். மேலும் தரம் உயர்த்த வேண்டும். 24 X 7 இயங்கும் விதமாக மாற்ற வேண்டும். குறிப்பாக அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும் தற்காலிக மருத்துவர்களை பணியமர்த்தாமல் நிரந்தர மருத்துவர்களை பணியமர்த்த வேண்டும். அனைத்துவிதமான பணியாளர்களையும் நிரந்தரமாக நியமிக்க வேண்டும். ஆரம்ப சுகாதார மையங்களை மறுகட்டமைப்பு செய்ய வேண்டும். இன்றைய மக்கள் தொகை மற்றும் மருத்துவ சேவையின் தேவையை கணக்கில் கொண்டு எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

7. புற்றுநோய் மருத்துவம் & மருந்து சேவை

தாலுகா மருத்துவமனைகளில் தற்போது வாய் மற்றும் கர்ப்பப் புற்று நோய்க்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது. வரும் காலங்களில் அனைத்து புற்று நோய் பரிசோதனை மற்றும் அதற்கான தொடர் சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். புற்று நோய்க்கான மருந்துகளின் விலை சாதாரண ஏழை எளிய மக்கள் வாங்கக் கூடிய நிலையில் இல்லை. எனவே இலவசமாகவும், குறைந்த விலையிலும் வழங்க



வேண்டும். புற்றுநோய் சிகிச்சைக்கான மண்டல அளவிலான மருத்துவமனைகளை அதிகப்படுத்த வேண்டும்.

9. பள்ளி & கல்லூரிகளில் ஆரோக்கியம்

பள்ளி & கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் ஆரோக்கிய நலனைப் பாதுகாக்க தொடர் செயல்பாடுகளை நடத்த வேண்டும். (வளரிளம் பருவம், போதை பழக்க வழக்கங்களில் இருந்து மீட்டல், உளவியல் அணுகுமுறைகள், ஆரோக்கியமான உணவுகள் வழங்குதல்) பள்ளி கல்லூரிகளில் ஆரோக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிரந்த மருத்துவப் பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

10. கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகளை முறைப்படுத்துதல்

அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதி செய்து தர வேண்டும். கழிவுநீர் மற்றும் கழிப்பறை சுத்தம் செய்வதை மனிதர்களே நேரடியாக தனது கைகளால் சுத்தம் செய்யக்கூடாது. வரும் காலங்களில் பாதுகாப்பதற்கு தேவையான உபகரணங்களை உருவாக்க வேண்டும். பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்வதற்கு பயிற்சியளிக்க வேண்டும். நகர்ப்புறங்களில் நிரந்தர தூய்மைப் பணியாளர்களை நியமனம் செய்வது. தேவையான அளவிற்கு நியமனம் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும்.



Lung Cancer Treatment

கழிவு நீர் சுத்திகரிப்பு சுத்தம் செய்வதற்கு பயிற்சியற்ற தொழிலாளர்களைப் பயன்படுத்தும் தனியார்துறை நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பணிகளின் போது பாதிக்கப்பட்டால் அவர்களுக்கான இழப்பீடு முறையாகவும், உடனடியாகவும் வழங்கப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் மற்றும் பசுமைச் சிக்கல்கள்

1. அதிகரிக்கும் நீர் பற்றாக்குறையை சமாளித்தல்

- நீரின் முக்கியத்துவத்தையும், நீர் பற்றாக்குரையால் ஏற்படும் அவசியத்தைக் கருத்தில் கொண்டு தேசிய அளவிலான நீர் கொள்கையை உருவாக்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.
- வீட்டு பயன்பாடு, விவசாயம், தொழிற்சாலை ஆகியவற்றிருக்கு சமமாக நீர் விநியோகம் நடைபெற வேண்டும். குறிப்பாக நகர்புறங்களில் நீர் பாதுகாப்பு முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.
- அனைத்து வீடுகளுக்கும் உலக சுகாதார நிறுவன (WHO) தர நிலையில் குடிநீர் சீராக வழங்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

நீர் மாசுபாடு

ஆறுகள் மற்றும் குடிநீர் மாசுபடுவதை குறைக்க அதை ஒழுங்குப்படுத்த கடுமையான சட்டம் கொண்டு வந்து பாதுகாக்க வேண்டும்.

மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்களை (SPCBs) மீறுவதற்கு ஒன்றியத்தை அனுமதிக்கும் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்தம், 2024 இன் விதிகளை திரும்பப் பெறவேண்டும்.



நிலத்தடி நீர்

தமிழகத்தில் விவசாயம், குடிநீர் மற்றும் தொழில்துறைக்கு நிலத்தடி நீரை மட்டுமே சார்ந்திருப்பதால் நிலத்தடி நீரை பாதுகாக்கவும், அளவுக்கு மீறி தண்ணீர் உறிஞ்சப்படுவதையும் கண்காணிக்க வேண்டும்.

2.நகர்ப்புற வெள்ளங்கள் வருவதை தடுப்பு நடவடிக்கைகள்

திட்டமிடப்படாத நகர விரிவாக்கம், வடிகால் அமைப்புகளில் ஆக்கிரமிப்புகள், மோசமான நில பயன்பாட்டு திட்டமிடல், பேரிடர் தயார்நிலை இல்லாமை ஆகிய காராணங்களால் நகர்ப்புறங்களில் வெள்ளப்பெருக்கும், பாதிப்பும் ஏற்படுகிறது. எனவே பேரிடர் ஏற்பட்ட பிறகு உதவி வழங்கும் முறையிலிருந்து தடுப்பு, ஆபத்து குறைப்பு மற்றும் தாங்கும் திறன் (Resilience) ஆகியவற்றை மையமாகக் கொண்ட நிரந்தரமான கொள்கை உருவாக்க வேண்டும்.

- *வெள்ளப்பெருக்கால் பாதிப்பு ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து அபாயப் பகுதிகளை நவீன தொழில்நுட்பம் மற்றும் GIS அமைப்புகள் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும்.*



3.கழிவு மேலாண்மை

- திடக் கழிவு, கழிவுநீர்,உயிரியல் மருத்துவக் கழிவு (Bio-medical Waste), மின்கழிவு (E-waste), பிளாஸ்டிக் கழிவு, தொழில்துறை கழிவு ஆகியவை மிக முக்கியமான கழிவு வகைகள் ஆகும். பலவீனமான கழிவு மேலாண்மை நடைமுறைகள் நிலத்தடி நீர் மாசுபாடு, காற்று மாசுபாடு மற்றும் நதிகள் மற்றும் சூழலியல் அமைப்புகளுக்கு சேதத்தை ஏற்படுத்துகின்றன.

4.கடற்கரை சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல்

- தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது நீளமான கடற்கரையைக் (1076 கிமீ) கொண்டுள்ளது. காலநிலை மாற்றம் மற்றும் கடல்மட்ட உயர்வு காரணமாக அபாயங்கள் அதிகரித்து வருகின்றன.

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) விதிமுறைகள் அடிக்கடி மீறப்படுவது கடற்கரை கட்டுமானத் திட்டங்களை கவனமாக மதிப்பாய்வு செய்யவும் வலுவான கண்காணிப்பு தேவை என்பதை காட்டுகிறது. கடற்கரை மண்டல ஒழுங்குமுறை மண்டலம் மீனவ மக்களின் வாழ்வுரிமை, வாழ்வாதார உரிமை பாதிக்கப்படமால் இருக்க வேண்டும்.



5.கடற்கரை மற்றும் மீனவர் பாதுகாப்பு:

- அலையாத்திக் காடுகள் தற்போது இருப்பதைப் பாதுகாக்க வேண்டும். தேவைப்படும் இடங்களில் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். மீனவர்களுக்கு இயற்கை சீற்றத்தை தாக்குப்பிடிக்கிற வகையில் குடியிருப்புகள் அமைத்து தர வேண்டும்.

6.காவிரி டெல்டா பாதுகாப்பு

- காவிரி டெல்டா பல சுற்றுச்சூழல் அபாயங்களை எதிர்கொள்கிறது. மத்திய அரசு டெல்டாவை விவசாய பாதுகாப்பு மண்டலமாக அறிவித்துள்ளது. தற்போதைய சட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

7.காடுகள்

- மேற்கு தொடர்ச்சி மலைகள் Western Ghats உலகின் முக்கிய உயிரியல் பல்வகைமை மையங்களில் ஒன்றாக உள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலைகள் மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள காடுகளைப் பாதுகாக்கவும், கடற்கரையோரம் உள்ள பகுதிகளில் அலையாத்திக் காடுகள் உருவாக்கி பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8.சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிவிப்பு 2020

- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) என்பது எந்தத் திட்டமும் அனுமதி பெறுவதற்கு முன் அதன் சுற்றுச்சூழல்

விளைவுகளை மதிப்பீடு செய்யும் செயல்முறை ஆகும். EIA 2020 அறிவிப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்புகளை பலவீனப்படுத்துகிறது என்ற கவலைகள் எழுந்துள்ளன.

9.காலநிலை தயார்நிலை – காலநிலை – பொருந்திய நகரங்கள் மற்றும் கிராமங்கள்

- காலநிலை மாற்றம் வெப்ப அலைகள், வறட்சி, வெள்ளங்கள் மற்றும் கடல்மட்ட உயர்வை அதிகரித்து இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் விவசாயத்திற்கு பெரிய அபாயத்தை ஏற்படுத்துகிறது.
- தற்போதைய நடவடிக்கைகள் பெரும்பாலும் பேரிடர் ஏற்பட்ட பிறகு உதவியை வழங்குவதில் கவனம் செலுத்துகின்றன. தடுப்பு குறைப்பு மற்றும் தழுவல் நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.
- மாவட்டங்கள் தோறும் வானிலை கண்காணிப்பு கருவியை பொருத்தி தொடர்ந்து கணித்தால் கால நிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தீர்வுகளை செயல்படுத்த உதவியாக இருக்கும்.





- பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வங்களையும் நிறுவினால் அந்த குறிப்பிட்ட பகுதிகளை தொடர்ந்து கண்காணித்து பல்லுயிரினம் பாதிக்கப்படாமல் தடுக்கவும், பிரச்சனைகளுக்கு உடனடியாக தீர்வுகளை செயல்படுத்தவும் உதவியாக இருக்கும்

10.காலநிலை மாற்றம் – மாதிரி கிராமம் (Claimate Smart Village)

- காலநிலை - பொருந்திய நகரங்கள் மற்றும் கிராமங்களை உருவாக்குவது நீண்டகால சேதத்தை குறைத்து, குறிப்பாக விவசாயிகள் போன்ற பாதிப்புக்குள்ளாகும் சமூகங்களை பாதுகாக்க உதவும்.
- வெப்ப அலை பாதிப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு திட்டங்கள் அதிகமான மாவட்டங்களில் செயல்படுத்தப்பட வேண்டும்.

11. சுற்றுச்சூழல் கொள்கை மற்றும் சட்ட திருத்தங்கள்

- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) செயல்முறைகளை வெளிப்படையான, பொறுப்புடைய, காலக்கெடு கொண்ட மற்றும் நலன் மோதல்கள் இல்லாததாக

மாற்றி, EIA அறிவிப்பு 2020-ஐ ரத்து செய்து புதிய வழிகாட்டுதல்களை உருவாக்குதல்.

- நிறுவனங்களுக்கு உயிரியல் அறிவை மாற்ற அனுமதிக்கும் உயிரியல் பல்வகைமை திருத்தச் சட்டம் 2023 இன் விதிகளை ரத்து செய்தல்.

12. சோடியம் அணு உலைகள் தமிழகத்தில் வருவது குறித்து தமிழக அரசு கொள்கை ரீதியான முடிவுகள் மற்றும் திட்டமிடல் வேண்டும். மக்கள், சுற்றுச்சூழலாளர்களின் கருத்துகள் பெறப்பட வேண்டும்.

பெண்கள் மற்றும் பாலின சமத்துவம் சார்ந்த கோரிக்கைகள்

1. ஒருங்கிணைந்த பெண்கள் வாழ்வியல் பாதுகாப்பு அமைப்பு

பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த வாழ்வியல் பாதுகாப்பு அமைப்பை உருவாக்கி, தொடர்ந்து சட்டமன்ற கூட்டங்களில் விவாதித்து பெண்களின் முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்ய வேண்டும்.

2. பொருளாதார கணக்கெடுப்பு

ஊதியமில்லா வேலைகளைச் செய்யும் பெண்களின் நிலையை அறிந்து, அவர்களுக்கான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மாநில பொருளாதார கணக்கெடுப்பில் பெண்கள் குறித்த தகவல்களையும் சேர்க்க வேண்டும்.


3. அரசு மானியத்துடன் இலவச சேவை மையங்கள்

வேலைக்கு செல்லும் பெண்களுக்கு குடும்ப பொறுப்புகளால் ஏற்படும் அழுத்தத்தை குறைப்பதற்காக:

- மழலையர் காப்பகம்
- பகல் நேர குழந்தைகள் பராமரிப்பு மையம்
- முதியோர் காப்பகம்

இவற்றை ஒவ்வொரு ஊராட்சி மற்றும் நகராட்சி வார்டுகளிலும் அரசு மானியத்துடன் அமைக்க வேண்டும்.

4. தலைமை பொறுப்புகளில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு



உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாநில அரசியல் பொறுப்புகளில் தலைமைப் பொறுப்புகளுக்கு பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்க வேண்டும்.

5. திட்டக் குழுக்களில் 50% பெண்கள் நியமனம்

மாநிலம், மாநகராட்சி மற்றும் உள்ளூர் அமைப்புகளின் திட்டக் குழுக்களில் 50% பெண்கள் நியமிக்கப்பட வேண்டும். கல்வி, அரசியல், அறிவியல் மற்றும் நீதித்துறைகளில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

6. தமிழ்நாடு அரசு பெண்கள் முன்னேற்ற கவுன்சில்

தமிழ்நாடு அரசு பெண்கள் முன்னேற்ற கவுன்சிலை அமைத்து:

- அனைத்து கட்சிகள்
- மாவட்ட நிர்வாகம்
- பெண்கள் அமைப்புகள்

இவற்றின் பிரதிநிதிகள் இணைக்கப்பட வேண்டும்.

இந்த கவுன்சில் பாலின சமத்துவம் செயல்படுத்தப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும்.



7. பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் கல்வித் திட்டம்

1 முதல் 12ஆம் வகுப்பு வரை:

- *பொறுப்புகள்*
- *மதிப்புகள்*
- *உணர்வு சார்ந்த நுண்ணறிவு*

இவற்றை உள்ளடக்கிய பாலின சமத்துவக் கல்வித் திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும்.

8. பாலின சமத்துவ ஊடக கண்காணிப்பு குழு

பாலின பாகுபாட்டை ஊக்குவிக்கும் விளம்பரங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை கண்காணித்து தடை செய்ய:

- *ஊடக கண்காணிப்பு குழு அமைத்தல்*
- *சமூக ஊடகங்களில் விழிப்புணர்வு வீடியோக்கள் வெளியிடுதல்*
- *தடை செய்ய சட்டம் கொண்டுவருதல்/ தண்டனை தருதல் என நடைமுறை கறாராக கடைபிடித்தல்*

9. பெண்களின் பொருளாதார வலுப்படுத்தல் நிதி

பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக:

- *சுய உதவி குழுக்களுக்கு காப்பீடு மற்றும் ஓய்வூதியம்*
- *குறைந்த வட்டி கடன்கள்*
- *பெண்கள் சந்தை அமைப்பு*
- *தனி கூட்டுறவு வங்கிகள்*

இவற்றை உருவாக்க வேண்டும்.

10. பெண்கள் ஆரோக்கியம் மற்றும் சுகாதார குழு

பெண்களின் சுகாதாரத்தை உறுதி செய்ய:

- *பள்ளி, கல்லூரி, அலுவலகங்களில் கழிப்பறை, தண்ணீர் வசதியுடன் வேண்டும்.*
- *பள்ளி, கல்லூரி, அலுவலகங்களில் மாதவிடாய் காலத்தில் பயன்படுத்தும் சானிடரி நாப்கினை எரிக்க இன்சினேடர் (incinator) வசதி கட்டாயம் செய்து தரப்பட வேண்டும்.*

11. பாலியல் கொடுமைகளுக்கு கடுமையான தண்டனைகள்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு



- சட்டம் இயற்றப்பட வேண்டும்.
- அதற்கான வழக்கு விரைவு நீதிமன்றம்த்தில் நடத்தப்பட வேண்டும்.
- கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

12. போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் வழிகாட்டல் மையங்கள்

- மது மற்றும் போதைப்பொருள் விற்பனைக்கு தடைவிதித்தல்
- மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு வழிகாட்டல் மையங்கள்
- விழிப்புணர்வு திட்டங்கள்
- பள்ளிகளில் மனநல ஆலோசகர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

13. அரசு வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு முன்னுரிமை

பெண்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

14. மாவட்டங்களில் மகளிர் ஆணையம்

மாநில மகளிர் ஆணையத்தை அனைத்து மாவட்டங்களிலும் விரிவுபடுத்த வேண்டும்.

15. மூன்றாம் பாலினம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலம்

மூன்றாம் பாலினத்தினர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு:

- கல்வியில் சலுகை
- வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை
- சுயமரியாதை பாதுகாப்பு
- அலுவலகங்களில் சமூக மரியாதை வழங்கப்படுதல் தொடர்பான சட்ட திருத்தம் செய்யப்படுதல். இவை உறுதி செய்யப்பட வேண்டும்.

16.பெண்களுக்கான சுகாதாரத்தில் அரசு மருத்துவ மனைகளில், தொடர்ந்து அவர்கள் பிறப்பிலிருந்து முதுமை வரை அவர்கள் நலம் கண்காணிக்க, திட்டம் மற்றும் குழு.

- "ஒரே சுகாதாரம்" என்ற தலைப்பில் அட்டை வழங்கி பிறப்பிலிருந்து –இறப்பு வரை அதனைச் செயல்படுத்த வேண்டும்.
- பெண்களுக்கு இப்போது மார்பக புற்று நோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் இந்தியாவிலும், குறிப்பாக தமிழகத்திலும் அதிகரித்து வருகிறது.
- இதற்காக அனைத்து ஆரம்ப சுகாதாரம், நகர்ப்புற சுகாதாரம், மற்றும் தாலுகா மருத்துவமனைகளில் ஸ்கேன் வசதி செய்யப்பட வேண்டும்.
- அவர்களுக்கு நோய் சிகிச்சை உரிய முறையில், தாலுகா மருத்துவ மனைகளிலேயே தரப்பட வேண்டும்..
- புற்றுநோய் பாதித்த பெண்களுக்கு, மருந்துகள் கட்டணமின்றி சலுகை விலையில் வழங்கப்பட வேண்டும்.
- புற்றுநோய் குறித்த பரப்புரை செய்யப்படவேண்டும்.

17. பெண்களுக்கு கட்டணமில்லா கல்லூரிப் படிப்புகள்

கல்லூரிகளில் மாணவிகள் பட்டப் படிப்பினை கட்டணமின்றி படிப்பதற்கான திட்டம் உருவாக்க வேண்டும். அனைத்து மாணவிகளுக்கும் உயர் கல்வி வாய்ப்பினை உறுதி செய்ய வேண்டும்.





18. உயர் கல்வியில் கண்காணிப்புக் குழு

பொதுவாக பெண்களை ஆராய்ச்சிப் பணிக்கு எடுப்பது குறைவாக உள்ளது. திருமணம், மகப்பேறு போன்ற காரணங்கள் அல்லாமல் பட்ட மேற்படிப்பு முடித்த பெண்களில் எத்தனை பேர் ஆராய்ச்சிப் பணிகளுக்கு விண்ணப்பித்துள்ளனர், சேர்ந்துள்ளனர் போன்ற தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு அரசு, உயர்கல்வியில் கண்காணிப்புக் குழுவை அமைத்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

19. ஒற்றை உயர் பதவி பொறுப்புகளில் பெண்களுக்கான சுற்று முறை

உயர் பதவிகளில், பெண்கள் பொறுப்பு ஏற்பது என்பது நடைபெறவில்லை. ஒதுக்கப்படுகிறார்கள். துணை வேந்தர், நிர்வாக அதிகாரி, போன்ற ஒற்றைப் பதவி பொறுப்புகளில், பெண்களும் பதவிக்கு வருமாறு, பொறுப்பை சுற்றுக்கு விடவேண்டும். அதாவது 3 ஆண்டுக்கு ஒருமுறை மாற்றுவதுடன், அதில் ஒரு சுற்றில் உயர் பொறுப்புகளில் பெண்ணுக்கு பதவி கொடுக்கபட வேண்டும்.

20. அரசுப் பணிகளில், பெண்களுக்கு குறைந்த பட்சம் பணிகள்

அரசுப் பணிகளில், பெண்களுக்கு குறைந்த பட்சம் 33% பணிகள், பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா, என அரசு கவனிக்க, அதற்கான ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும். குழு செயல்பட வேண்டும்.